தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

திருவள்ளுவர் ஆண்டு 2042, ஆடி 25

2011 ஆகஸ்ட் 10, புதன்கிழமை

சென்னை, புனித ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. டி. ஜெயக்குமார்** *அவர்கள் தலைமையில் காலை 10–00 மணியளவில் பேரவை கூடியது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"இன்சொலால் ஈத்தளிக்க வல்லார்க்குத் தன்சொலால்
தான்கண் டனைத்திவ் வுலகு."

எளிய மக்களிடம் இனிமையாகப் பேசி, தேவையானதைக் கொடுத்து, உதவி செய்யும் ஆட்சியாளருக்குப் புகழ் தானாக வந்து சேரும். அவர் விருப்பம்போல் குடிமக்களும் அமைவார்கள்.

1. வினாக்கள்–விடைகள்

(அ) உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 15, மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. முத்துராமலிங்கம், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.*

15—

தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள்

***345—திரு. ம. முத்துராமலிங்கம்:**

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருமங்கலம் தொகுதி, பேரையூர் வட்டம், டி. கல்லுப்பட்டியில் தீயணைப்பு நிலையம் புதியதாக அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா, முதலமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) திருமங்கலம் தொகுதி, டி. கல்லுப்பட்டியைச் சுற்றி 25 கிலோ மீட்டர் தொலைவிற்குள் வத்திராயிருப்பு, கள்ளிக்குடி, மயிலாடும்பாறை மற்றும் உசிலம்பட்டி ஆகிய நான்கு தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. எனவே, மேற்கண்ட தீயணைப்பு மற்றும் மீட்புப் பணி நிலைய ஊர்திகளைக் கொண்டே இப்பகுதியில் ஏற்படும் தீ விபத்து மற்றும் மீட்புப் பணி அழைப்புகளை மேற்கொள்ள இயலும். எனினும், டி. கல்லுப்பட்டி மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளில் அதிக அளவில் குடிசை வீடுகள் உள்ள காரணத்தாலும், மேலே குறிப்பிட்ட தீயணைப்பு மற்றும் மீட்புப் பணி நிலையங்களிலிருந்து டி. கல்லுப்பட்டி செல்லும் சாலைகள் நல்ல நிலையில் இல்லாததால் தீயணைப்பு வண்டிகள் விரைந்து செல்ல இயலாத காரணத்தாலும், டி. கல்லுப்பட்டியில் ஒரு புதிய தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையம் அமைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இப்புதிய தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையத்திற்கு ஒரு நீர்தாங்கி வண்டி வழங்கப்படும். அவ்வாறு ஒரு நீர்தாங்கி வண்டியை அதற்குரிய உபகரணங்களுடன் வாங்க 25 இலட்சம் ரூபாயும் மற்றும் தளவாடங்களுக்கு ஒரு இலட்சம் ரூபாயும், ஆகமொத்தம் 26 இலட்சம் ரூபாய் தொடரா செலவினமாக அனுமதிக்கப்படும்.

இந்தத் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையத்திற்கு ஒரு தீயணைப்பு அலுவலர், இரண்டு முன்னணி தீயணைப்போர்கள், ஒரு இயந்திர கம்மியர் ஓட்டி அதாவது, Driver Mechanic, *இரண்டு தீயணைப்போர் ஓட்டுநர்கள் மற்றும் 11 தீயணைப்போர்கள் ஆகிய பணியாளர்கள் ஒப்பளிப்பு செய்ய மற்றும் கட்டட வாடகை ஆகியவற்றிற்குத் தொடர் செலவினமாக ஆண்டொன்றுக்கு 50 இலட்சம் ரூபாயும் அனுமதிக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. முத்துராமலிங்கம் அவர்கள்.*

2011 ஆகஸ்ட் 10]

திரு. ம. முத்துராமலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அம்மா என்றால் அன்பு, அம்மா என்றால் துணிவு, அம்மா என்றால் பாசம் என்ற எடுத்துக்காட்டுக்கு ஒப்ப தமிழ்நாட்டினுடைய தன்னிகரில்லாத் தலைவர், மாண்புமிகு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்கி (மேசையைத் தட்டும் ஒலி) அடாவடித்தனமும் அட்டூழியமும் செய்து கொள்ளையடிக்கப்பட்ட பணங்களை, 'திருமங்கலம் ஃபார்முலா' என்ற ஒன்றை திருமங்கலம் இடைத் தேர்தலிலே காண்பித்தார்கள். அந்த இடைத் தேர்தலிலே போட்டியிடுகிற வாய்ப்பினை புரட்சித் தலைவி அம்மா எனக்கு வழங்கி, அதிலே வெற்றிபெறுவதற்குரிய முயற்சிகள் எல்லாம் மேற்கொண்டும்கூட, சூழ்ச்சியின் அடிப்படையிலே அந்த வெற்றிவாய்ப்பு பறிக்கப்பட்டது. 'திருமங்கலம் ஃபார்முலா'-வை முறியடிக்கக்கூடிய வகையில் பொதுத் தேர்தலிலே போட்டியிடுகிற வாய்ப்பினை மீண்டும் எனக்கு வழங்கிய, புரட்சித் தலைவி அம்மாவின் பொற்பாதங்களிலே என்னுடைய நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இந்தியத் திருநாட்டில் 'திருமங்கலம் ஃபார்முலா' என்பதை புரட்சித் தலைவி அம்மா அவர்களால் உடைத்தெறியப்பட்ட நல்ல செய்தியை உருவாக்கியதற்காக (மேசையைத் தட்டும் ஒலி) திருமங்கலம் தொகுதி மக்களின் சார்பில் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பின்தங்கிய பகுதிக்கு இந்தத் தீயணைப்பு நிலையத்தை புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கொடுத்து, அதற்கான உபகரணங்கள், வாகனங்கள் அத்தனையும் அனுமதித்ததற்காக என்னுடைய தொகுதி மக்களின் சார்பிலும், டி. கல்லுப்பட்டி பகுதி மக்களின் சார்பிலும், பாதங்கள் பணிந்து நன்றியினைத் தெரிவித்து விடைபெறுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் அவர்கள்.

திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1992 ஆம் ஆண்டு குளச்சல் பகுதியிலே ஆரம்பிக்கப்பட்ட தீயணைப்பு நிலையத்திற்குச் சொந்தமான கட்டடம் இல்லை. குறிப்பாக 50 கிராமங்களுக்குத் தேவையான அந்த . . .

முற்பகல் 10—05

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இது மூலக் கேள்விக்குத் தொடர்பில்லை.*

வினா வரிசை எண் 16, மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்க. தமிழ்ச்செல்வன், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

16—

பாதுகாப்பு

***668—திரு. தங்க. தமிழ்ச்செல்வன்:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

விவசாய நிலங்களைப் பாதுகாத்திட பார்த்தீனியம் செடியை அழிப்பதற்கு அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், வேளாண்மைத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

பார்த்தீனியம் செடியை அழிப்பதற்கு எந்தத் திட்டமும் அரசிடம் இல்லை. இந்தச் செடியினை அழிப்பதற்கு உப்புக் கரைசல் தண்ணீரைத் தெளித்து அதன் மூலமாக அது அழிக்கப்படும் என்பதை வேளாண் இணை இயக்குநர் மூலமாக விவசாயிகளுக்கு அறிவுறுத்தப்படுகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்க. தமிழ்ச்செல்வன் அவர்கள்.*

திரு. தங்க. தமிழ்ச்செல்வன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வரலாற்றுச் சிறப்புமிக்க, அனைவராலும் போற்றத் தகுந்த, ஏற்றுக்கொள்ளப்பட்ட நிதிநிலை அறிக்கையை சமர்ப்பித்து, தமிழ்நாட்டில் மூன்றாவது முறையாக தமிழக முதலமைச்சராகப் பொறுப்பேற்றுள்ள, நாங்கள் நித்தம் நித்தம் வணங்கும் தமிழகத்தின் காவல் தெய்வம், கழக நிரந்தரப் பொதுச்*